உ



உ

ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி சின்னத்தம்பி ஆச்சிக்குட்டி

அவர்களின் சிவப்பேறு குறித்த

31ம் நாள

# நினைவு மலர்

17. 01. 2006

மேனகா பிறிண்டேர்ஸ், 342, யாழ். T.P 9468

உ

சிவமயம்



ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட

அமரர்

# திருமதி சின்னத்தம்பி ஆச்சிக்குட்டி


அவர்களின் சிவப்பேறு குறித்த

**31ம் நாள்**

# நினைவு மலர்

**17. 01. 2006**

# சமர்ப்பணம்



எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் சிகரமாய்
அணையாத தீபமாய்
அனைவருடனும் பாசத்துடனும்
நேசத்துடனும் பழகி இறக்கும் வரை
இனமுகத்தினளாய் அறநெறி நடந்து
குடும்பத் தலைவியாக இருந்து எமைக்காத்து
வளர்த்து உயர்வளித்து இறைவனடி சேர்ந்து
அமரர் சின்னத்தம்பி ஆச்சிக்குட்டி அவர்களின்
நினைவாக இந்த நினைவு மலரை அன்னாரின்
பாதார விந்தங்களில் இக் காணிக்கையை
கண்ணீரோடு சமர்ப்பிக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

இங்ஙனம்
பிள்ளைகள்.

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



அமரர்
## திருமதி சின்னத்தம்பி ஆச்சிக்குட்டி

தாயின்மடியில்
01. 01. 1935

ஆண்டவன்அடியில்
18. 12. 2005

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

ஆலந்தானுகந்து அமுது செய்தானை
ஆதியை யமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானை
சிந்திப்பார் அவர் சிந்தையுள்ளானை
ஏலவார் குழலாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைப் கம்பனெம்மானைக்
காணடியேன் பெற்றவாறே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லைய் - சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்குகே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவழம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



## அமரர் திருமதி – சின்னத்தம்பி ஆச்சிக்குட்டி அவர்களின் வாழ்க்கையின் சுருக்கம்

இந்து சமுத்திரத்தின் மத்தியிலே முத்துப் போல் ஒளி பரப்பிக் கொண்டிருக்கும் ஈழத்திரு நாட்டின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணத்தில் நீர்வளம் நிலவளம் குன்றாப் பொருள்வளம் கலைவளம் பொருந்தியதும் ஆலயங்களும், பாடசாலைகளும் சனசமூக நிலையங்களும் காணப்படும். ஊரெழு என்னும் இடத்தில் காலஞ்சென்ற திரு. திருமதி. தம்பு பூதி தம்பதியினருக்கு இளைய மகளாக 1935ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி அவதரித்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/ஊரெழு கணேசா வித்தியாலயத்தில் தொடர்ந்தார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக செல்லமாக வாழ்ந்து வந்தார். இவரை இல்லறச் சோலையில் நுழைக்க விரும்பிய பெற்றார் ஊரெழு வாழ் சின்னட்டி சடைச்சி தம்பதிகளின் மகனை திருமணம் முடித்துக் கொடுத்தனர்.

இல்லக விளக்காம் நன் மக்கட் பேற்றினை இறைவன் இவர்களிற்கு அளித்த பயனாக கமலாவதியை மூத்த மகளாகவும் பெற்று மகிழ்ந்தனர். தன்னலமற்ற சிந்தனையாளன் தவநாயகம் சந்திரகுமாரன், மனோகரன், நிர்மலாவதி, சுசிலாவதியையும் பெற்று உவமை பூத்தனர்.

இவர் தனது பிள்ளைகளை சிறப்பாக வாழ வைக்க வேண்டுமென விரும்பி தனது பொறுப்

புணர்ந்த கணவரின் ஒத்துளைப்புடன் மணவாழ்வு அமைத்துக் கொடுக்க விரும்பி கமலாவதியை புன்னாலைக் கட்டுவன் வாழ். இராசசிங்கத்திற்கும் தவநாயகத்தை கோப்பாய் வாழ். செல்வமணியிற்கும், சந்திரகுமாரனை அச்சுவேலி வாழ். கற்பனாவதியிற்கும், மனோகரனை கோண்டாவில் வாழ் இரத்தினேஸ் வரியிற்கும், நிர்மலாவதியை உரும்பிராய் அன்னுங்கை வாழ். முத்துலிங்கத்திற்கும். சுசிலாவதியை சங்கானை வாழ். தர்மலிங்கத்திற்கும் மணவாழ்வு அமைத்துக் கொடுத்தார்.பிள்ளைகள் இனித்திருக்கக் கண்டு இருபத்தி நான்கு பேரக் குழந்தைகளுடனும் ஒரு பூட்டப் பிள்ளையுடனும் மகிழ்வாக இனித்திருந்தார். வெளியூரில் வாழும் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் எண்ணி வருத்தலுற்றார். தனது ஊரில் உள்ள பதினெட்டு பேரப்பிள்ளைகளுடன் ஒன்றாக அளவளாவி மகிழ்ந்தார்.

இவர் எல்லோரிடமும் அன்பாய் பழகும் தன்மை உள்ளவர் கேட்போருக்கு இல்லை என்று கூறாது தன்னிடம் இருப்பவற்றை கொடுத்துதவும் மனப்பாங்கு உள்ளவராக விளங்கினார். இவர் யாழ் வைத்தியசாலையில் ஆனந்தமாக பேசி தன் கடமைகள் முடிந்து விட்டது என்று நின்மதிப் பெருமூச்சுடன் இறையுலகில் இறைவனோடு சங்கமமானார்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



## .பிள்ளைகளின் மனக்குமுறல்

அன்புக்கினிய எம் அருமை அம்மாவே
எம்மைத் தவிக்க விட்டு எங்கு தான் சென்றீர்கள்
உன்முகம் காண ஆசை கொண்டிருக்கையிலே எங்கே சென்றீர்கள்
அம்மா நெஞ்சு வலியால் நீங்கள் துடித்தும் கூட
எங்களிற்கு ஆறுதல் கூறிநீர்களே இனி யார் ஆறுதல் கூறுவது.
தினம் தினம் பிள்ளைகளைப் பற்றி கவலைப் படுவீர்களே
அம்மா உங்களிற்கு பாரிசவாத நோய் உள்ளநேரம் கூட தளராத நடை நடப்பீர்களே.
உங்களுக்கு தேவையான வேலைகளைக்கூட
உதவியை நாடாமல் நீங்களே செய்வீர்கள் அம்மா.
நெஞ்சு வலியால் வைத்திசாலைக்கு போகும் போது
நாங்கள் வழியனுப்புகையில் எங்களை பார்த்து ஒரு கதை சென்னாயே
அதனை நினைக்கும் போது எங்கள் இதயமே வெடிக்கின்றது.
பிள்ளைகளை கஸ்ரப்படுத்தப் போகிறேன் என்று அடிக்கடி சென்னீரே
உங்களுக்காக நாங்கள் எதையும் செய்ய தயாராக இருந்தோம்
ஆனால் மறுநாள் காலையில் உங்களைப் பார்க்க வருவதற்குள்
உங்கள் உயிர் பிரிந்தது ஏனோ.
அம்மா நீங்கள் எங்களை விட்டு வெகு சீக்கிரம் பிரிவீர்கள் என்று
நாங்கள் கனவிலும் கூட நினைக்கவில்லை
அம்மா நாங்கள் காண்பது கனவா நனவா என்று கேள்விக் குறியாக உள்ளது
உங்களை தினம் தினம் நினைத்து வாடுகின்றேம்.

**அன்பான குலவிளக்கே**

ஆச்சிக்குட்டி எனும் செல்லப் பெயர் கொண்டாயே
இன்முகம் காட்டி எமை இன்புற வைத்தாயே
ஈடில்லா உறவிலே மகிழ்ந்திருந்தோம்
உறவுகளை பிரிந்து செல்ல உனக்கு மனம் வந்ததோ
ஊமையாய் நாமிங்கு வாடுகின்றோம்
எம்தாயை இஸ்டம் போல் பார்ப்போம் என்றோம்
ஏக்கத்தை மட்டும் பெற்று அழுகின்றோம்
ஐங்கரனிடம் கேட்டவரம் இதுதானா
ஒரு வழியும் தெரியாமல் தவிக்கின்றோம்
ஓடி ஒழிந்து எங்குதான் சென்று விட்டாய்
ஔடதமும் உனக்கு ஆவியை தரவில்லையே
(கமலாவதி, தவநாயகம், சந்திரகுமாரன், நிர்மலாவதி)

## கொலன்டில் இருந்து இளையமகன் புலம்பல்

மரணத்தின் மடியிலே சாய்ந்தாயோ என்தாயே.
உன் இளையமகன் மனோகரனைக் காணாமல் போனாயோ என்தாயோ.
என்தாயே விதி வந்து நெடுந்தூரம் சென்றாயோ என் தாயே.
வருவோம் நாம் என்று பார்த்திருந்து விழி மூடினாயோ.
உன் இளைய மகனின் துயரத்தை நினைத்து இறைவன் சேர்ந்தாயோ.
தாயே உன்னை இழந்து தவிக்கின்றோம் துடிக்கின்றோம்
தொலைவில் உள்ள பிள்ளைகள் நாம் கலங்கி தவிக்கின்றோம்.
எங்கள் வரவை எதிர் பார்த்திருந்த உனக்கு
ஏக்கம் பிறந்தது வந்து போவதற்கு விசா கிடைக்கவில்லை என்று
அம்மா நீ உயிருடன் இருக்கும் வரைக்கும் எனக்கு
நிரந்தரக் காட் கிடைக்கவில்லையம்மா.
அம்மா உன் காட் நிக்கவும் எனக்க நிரந்தர காட் கிடைத்தம்மா.
அம்மா உன் காட்டை எனக்கோ தானம் செய்தாய்?
உன் பேரப் பிள்ளைகள் கவனம் என்று நீ கவனம் இழந்தாயோ?
உன் முகம் பார்க்கமுன் உன் ஊர்வலம் நான் பார்க்கமுன்
எம்மை விட்டு போக எப்படி அம்மா மனம் வந்தது.
தனி வழியே நீ போக பயந்திருந்தாய் இன்று
தனியாகப் போகவே துணிந்து விட்டாயம்மா.
இரவு வேளையில் ஊரெழு வீதியிலே ஊர்வலமாய் சென்றாயோ?
அம்மா என் கவலைகளை எல்லாம் உடம் பிறப்புக்களுடன்
தொலை பேசியூடாகவே தீர்க்கின்றேன். ஆனால்
என் மனம் இன்னுமோ ஆறவில்லை அம்மா.
தாய் பிள்ளைகள் உறவான வாழ்க்கையே பேரின்பம்
அந்த வாழ்க்கை எங்கே இனிக்கிடைக்கும்.
உன் பாசத்திலே வாழ்ந்து சொர்க்கத்தில் வாழ்ந்தது போல்
இன்று உன் வர்வு முடிந்து போய் விட்டாயோ?
வாழை மரம் வாசலில் கட்டி வடிவான கோலம் போட்டு
நீ நடமாடிய வீதியிலே ஊர்தியில் சுமந்து
பறைகள் கொட்ட பட்பாசுகள் கொழுத்தி
ஊர்வலமாய் சென்றீரோ என் அம்மா.
ஓயாத கதைகள் பாயில் படுக்காத உடம்பு
நிம்மதியாய் இனி நித்திரை கொள்ளட்டும்.
உடலை விட்டு உயிர் அமைதி கொள்ள சென்று விட்டது.
பூமியிலே வாழ்ந்து. போதும் என்று விண்ணுலகம் சென்று விட்டது
அம்மா என்தாயே மறுபடியும் என்தாயாய் வருவாய்
சென்றுவா என்தாயே. இவ்வளவு தான் உன் வாழ்க்கை.

**உன் இளைய மகன்**
**மனோகரன்**



## லண்டனில் இருந்து இளைய மகள் புலம்பல்

என்னை ஈன்றெடுத்த என் அம்மா என்னை விட்டு எங்கே
சென்றீர்கள் இளைய மகள் நான் இங்கே புழுவாய்
துடிக்கின்றேன்.
உன்னையே தினம் தினம் நினைத்திருந்தேன்.
ஊருக்கு வந்து நான்பட்ட துன்பங்களை எல்லாம்
உன்மடியில் சாய்ந்து சொல்வதற்கு தவித்திருந்தேன் அம்மா
என் அம்மாவை இஷ்டம் போல் பார்ப்பேன் என்றேன்
ஏக்கத்தை மட்டும் பெற்று அழுகின்றேன்.
ஐயோ! இது என்ன கொடுமை என்றேன்
அம்மா ஒரு வழியும் தெரியாமல் தவிக்கின்றேன்.
ஓடிவர முடியாமல் அழுகின்றேன்.
அம்மா உன் இறுதி கடமை கூட என்னால் செய்ய
முடியவில்லை என் அம்மாவின் கடமைகளை நான் செய்யாது
போனாலும்
என் கணவர் பக்கத்தில் நின்று செய்துள்ளார்.
உன் இளைய மகளின் துயரத்தை நினைந்து இறைவனடி
சேர்ந்தாயோ
உன் கடைசி மகள் நான் இங்கு குமுறித் தவிக்கின்றேன்
கட்டியழ யகரும் இல்லை இங்கு கதறி கலங்குகின்றேன்
அம்மா.
உதயத்தில் உங்கள் உயிர் உயர்ந்த நிலை சென்றதோ
அம்மா.
காலை மணியோசையிலே அம்மா கண்மூடிப் போனீரோ அம்மா.
ஞாயிற்றுக்கிழமை அம்மா உங்கள் கூடிப் போனாயோ
பறந்து வரமுடியவில்லை. உங்களை பார்த்து அழவும்
முடியவில்லை
அந்நிய நாட்டில் நின்று நாம் ஒருவழியும் தெரியாமல்
துடிக்கின்றோம்.
தொலைபேசியூடாகவே உங்களுடன் அடிக்கடி
உரையாடுவேன் அம்மா.

இப்போது என் அம்மா எங்கே என்று சகோதரர்களை
கேட்கின்றேன் என் மனம் என்றுமே ஆறாது அம்மா.
கட்டியழ முடியவில்லை. அம்மா உங்களின் கடமைக்கு
வரமுடியவில்லை.
அள்ளி அரிசி இடமுடியவில்லை. உன் அருகில் வரவும்
முடியவில்லை.
தள்ளி இங்கிருந்து நானும் தவிக்கின்றேன் அம்மா.
வைரவரை வணங்கி நீங்கள் முத்தி பெற்று விட்டீர்கள்.
வைரவரின் கட்டடங்கள் கட்டி முடிய முன்னே பார்க்காமல்
போய் விட்டீர்கள்.
கண்ணீரைப் பன்னீராக்கி காலங்கள் தோறும்
கைகூப்பி நிற்கின்றேன் அம்மா.

**உன் இளைய மகள்**
**சுசீலாவதி. த**

## மருமக்கள் புலம்பல்

மாமி மாமி என்று புலம்பி நிற்கின்றோம்.
ஆறுதல் கூறி நிற்கும் அன்பான முகம் எங்கே.
ஆறாத் துயரத்தில் மீளா திருக்கின்றோம்.
இனி மாமி என்று அழைப்பதற்கு யார் தான் உள்ளார்.
எங்கள் பிள்ளைகளுடன் அன்பாய் பழகுவீர்களே
சின்ன சின்ன பாடல்கள் கூட சொல்லிக் கொடுப்பீர்களே
எங்கள் பிள்ளைகள் எல்லாம் உங்களை காணாது ஏங்கித்
தவிக்கிறார்கள்
ஒரு முறையாவது எங்கள் முன்னே தோன்றிட மாட்டீர்களா?
உங்களை காணத் தவிக்கின்றோம்.

இராசசிங்கம், செல்வமணி, கற்பனாவதி,
இரத்தினேஸ்வரி, முத்துலிங்கம்,
தர்மலிங்கம்.



## பேரப்பிள்ளைகளின் புலம்பல்

நீரெழும் கண்ணில் நிதம்
தூக்கம் தூரத்திலோ - எங்கள்
ஊரெழு மண்ணின் சுகம்
மொத்தமாய் சோகத்திலோ.
சீர் எழுதும் காலப் பேனா
கொள்ளித் தீயில் தீர்ந்ததோ- எனி
யார் அழுதும் ஞானத்தாயே
எந்தக் கோயில் சேர்ந்ததோ.

கடலைக் கூடக் கடக்கும்
கண்ணீர் நாம் கஞ்சலானோம் -ஒரு
புடலைக் கொடி புழுப்பட்டதாய்
பொலி விழந்தான் போனோம் - அப்பம்மா
சுடலை வரை வரவும்
நாமன்று துணிந்து விட்டோம் -ஆனால்
படலை வரை வந்தல்லவா
நாமன்று விழுந்து விட்டோம்.

## ஈஸ்வரியின் தவிப்பு

என்றும் என் அன்பு பாசமும் மறவாத என் அம்மம்மாவே என்னை
விட்டு எங்கே சென்றீர்கள்.
எடுத்ததற் கெல்லாம் தங்கச்சி தங்கச்சி என்று அழைப்பீர்களே
இப்போது யார் தான் தங்கச்சி என்று அழைப்பது.
அம்மம்மா உங்கள் குரல் கேட்டு மாதங்கள் ஒன்றாகின்றன.
ஒருமுறையாவது என் கண் முன்னே தோன்றி தங்கச்சி
என்று அழைக்க மாட்டீர்களா?
உனது திருமணம் எப்போது நடக்கும் அதனைக்
கண்டு விட்டுத்தான் கண்மூடுவேன் என்று அடிக்கடி
புலம்புவீர்களே
இப்போது திருமண பேச்சிற்கு வருவதைக்கண்டு
தூங்கி விட்டீர்களோ.

எப்படி எல்லாம் வாழ வேண்டும் என்று அறிவுரை கூறுவீர்களே
இனி யார் தான் எமக்கெல்லாம் அறிவுரை கூறுவது.
அம்மம்மா அம்மம்மா என்று கதறுகிறேன் உங்களிற்கு
கேட்கவில்லையா
உங்கள் உயிரற்ற உடலைக் கூட பல மணி நேரம்
பார்க்க முடியாத பாவிகளாக போய்விட்டோம்.
உங்களை சிலமணி நேரம் பார்த்து எல்லோரும் துவண்டு
விட்டோம்.
அம்மம்மா அப்பம்மா என்று உங்கள் பேரப்பிள்ளைகள்
அனைவரும்
உங்களைச் சுற்றி நின்று கதறுவது உங்கள் காதில்
விழவில்லையா?
எங்கள் இன்பத்திலே நீங்கள் திளைத்திருப்பீர்களே
எங்கள் துன்பத்திலும் துவண்டு போவீர்களே
எப்போதும் கூறுவீர்கள் கவனம் கவனம் என்று
சிறு தலைவலி வந்தால் கூட துடிதுடிப்பீர்களே
இப்போது நீங்கள் மறைந்த நாள் தொடக்கம்
பெரும் தலைவலியில் உள்ளேன்.
எப்போது வருவீர் எங்கள் பக்கத்தில்.
ஈர விழிகளே காய மறுக்கின்றது கண்ணின் இமைகளோ
தூங்க மறுக்கின்றது
இதயத்தில் கனம் ஏறிக் கொண்டே போகிறது.
எதையும் சிந்திக்க மனமும் மறுக்கிறது.
எங்கள் கண்ணீர்துளி அஞ்சலிகள் என்றும் உங்களிற்கு
கிடைக்கட்டும்.

## சிந்தனைத் துளிகள்

1. அறிவு யோசித்து செயல்ப்படுகிறது உணர்ச்சி அவசரமாக செயல்ப்படுகிறது.

2. கோழி அவசரப்பட்டால் போடும் முட்டை கூட தூள்தூளாக



உடைந்து விடும். மனிதன் ஆத்திரப் பட்டால் போடும் திட்டம் தோல்வி அடைந்து விடும்.

3. சுண்ணாம்பு சேர்த்து வெற்றிலை பாக்கோடு மென்றால் நாக்கு சிவக்கும் சும்மா விரத்தியை போட்டு மென்றால் வாழ்க்கை கசக்கும்.

4. அடுத்த வீட்டுக்காரன் யானை மீது போவதை எண்ணி அழாதே அடுத்த வேளை சோற்றுக்கு வழிசெய்யாமல் பானையைக் கழுவாதே.

5. நெரிசலான இடத்தில் படுக்காதே உறக்கம் கலைந்து விடும். நெருக்கம் ஆனவர் இடத்து கடன் கேட்காதே நெருக்கம் குறைந்து விடும்.

6. தந்தத்தை நம்பி யானை இருக்கலாம், சொந்தத்தை நம்பி நீ இருக்காதே பந்தத்தை நம்பி மதிப்பை இழக்காதே.

7. சொந்தக் காலில் நிற்க கற்றுக் கொள் அதன் பின்னே சுற்றம் உன்னைத் தேடி வரும் ஒத்துக் கொள்.

8. உன்னிடம் வம்பளப்பவன் உன்னைப் பற்றியும் வம்பளப்பான்.

9. சொந்த வீட்டில் இருக்கும் திருடனை யாராலும் காவல் புரிய முடியாது.

10. தொடங்கியதை பாதியில் விட்டு விடுவதைத் தவிர தொடக்காது இருப்பது மேல்.

## மற்றவர்களிடம் பேசுவது எப்படி

தாயிடம் அன்பாய்ப் பேசுங்கள்.
ஆசிரியரிடம் பண்பாகப் பேசுங்கள்.
சகோரியிடம் அடக்கத்தோடு பேசுங்கள்.
குழந்தைகளிடம் ஆர்வமாகப் பேசுங்கள்.
உறவினரிடம் பரிவோடு பேசுங்கள்.
நண்பர்களிடம் பணிவாக பேசுங்கள்.
துணைவியிடம் உண்மையாகப் பேசுங்கள்.
அதிகாரிகளிடம் பணிவாக பேசுங்கள்.
வியாபாரிகளிடம் கறாராகப் பேசுங்கள்.
தொழிலாளியிடம் மனித நேயத்துடன் பேசுங்கள்.
அரசியல் வாதியிடம் ஜாக்கிரதையாகப் பேசுங்கள்.
கடவுளிடம் மரியாதையாகப் பேசுங்கள்.
**பேசுங்கள் பேசுங்கள் ஆனால்**
**புரிந்து பேசுங்கள் புரியும்படி பேசுங்கள்**

## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம்: அதை நழுவவிடாதீர்கள்.
வாழ்க்கை ஒரு பயம்: அதை சென்று முடியுங்கள்.
வாழ்க்கை ஒரு விடுகதை: அதை விடுவியுங்கள்.
வாழ்க்கை ஒரு விளையாட்டு: அதில் ஈடுபடுங்கள்.
வாழ்க்கை ஒரு போராட்டம்: அதை வென்று காட்டுங்கள்.
வாழ்க்கை ஒரு வெகுமதி: அதை ஏற்றுக் கொள்ளுங்கள்.
வாழ்க்கை ஒரு போட்டி: அதை வெற்றி பெறுங்கள்.
வாழ்க்கை ஒரு கலை: அதை அழகுபடுத்துங்கள்.
வாழ்க்கை ஒரு வேதனை: அதை தாங்கிக் கொள்ளுங்கள்.
வாழ்க்கை ஒரு சவால்: அதை எதிர்நோக்குங்கள்.
வாழ்க்கை ஒரு சோகம்: அதற்கு மனம் தளராதீர்கள்.
வாழ்க்கை ஒரு பிரச்சனை: அதற்குத் தீர்வு காணுங்கள்.



## ஆரோக்கியத்திற்கு சிறந்த வழி

1. மார்புச் சளியை அகற்ற கற்பூரவள்ளி இலையை சாறு பிளிந்து தேனுடன் குழைத்து ஒரு கரண்டி தினம் சாப்பிடலாம்.

2. போதைவஸ்தினால் பாதிப்புற்ற உடலை குணமாக்க 10 கோரைக் கிழங்குடன் 10 மிளகை பாலிட்டு அரைத்து தினசரி காலை வெறும் வயிற்றில் உண்டு வர படிப்படியாக நஞ்சு முறியும்.

3. சிறுநீரகத்தில் கற்கள் சேராது தடுக்க ஆரஞ்சுப்பழம் வாழைத்தண்டு அடிக்கடிசாப்பிடுவதுடன். கூடுதலாக தண்ணீர் அருந்த வேண்டும் தலைவலி தீர 2வாள்மிளகு 1சுக்கு துண்டு கற்பூரம் சிறிது சேர்த்து பாலிலோ தண்ணீரிலோ அரைத்து வலியுள்ள இடத்தில் பூசி அனல் காட்டவும்.

4. படிப்பு சுமை காரணமாக பிள்ளைகள் சோர்வடையாமல் மூளைவலிமை பெற1/4 பிடி வல்லாரையை கஷாயம் செய்து பாலும் தேனும் கலந்து வாரத்தில் 3 நாள் பருகவும்.

5. இரத்த அழுத்த நோயை கட்டுப்படுத்த 1அவுன்ஸ் முருங்கை இலை சாற்றை 1கரண்டி தேனுடன் தினமும் காலை மாலை ஒரு கிழமைக்கு சாப்பிட்வும் (சக்கரை நோயாளிகள் தேனுக்கு பதில் 10மிளகு தூளாக்கி சாப்பிடலாம்).

6. நீரிழிவு நோயை கட்டுப்படுத்த ஒரு அவுண்ஸ் பாகற்காய் சாறு ஒரு அவுண்ஸ் சுடுநீருடன் 5 மிளகை தூளாக்கி கலந்து சாப்பிட்டலாம். (முள்ளங்கி, சுண்டங்காய், அவரை வாரம் 3 தடவை சாப்பிட்டால் நீரிழிவை தடுக்கவும்)

7. நீரிழிவைத் தீர்க்க வெந்தயம் ஒரு மேசைக்கரண்டி ஊறவைத்து அரைத்து சாப்பிட்ட ஒரு மணித்தியாலத்தின்

பின் சாப்பிடலாம். (கொலஸ்டோலை குறைப்பதற்கு தினசரி 10 மிளகை தூள் செய்து தண்ணீருடன் அருந்தவும்)

8. கண் ஒளிமங்காதிருக்க தான்றிக்காயை பொடிசெய்து1/4 கரண்டி தேனில் குழைத்து காலையில் சாப்பிடவும் பல் சொத்தை அகற்ற கண்டங்கத்தரி வேரை உலர்த்தி சாம்பலைக் கொண்டு பல் துலக்கவும்.

9. பாம்பு கடிக்கு சீந்தில் வேர் அறுகம்புல் அரைத்து எலுமிச்ச சாற்றுடன் குடிக்கவும்.

10. வயிற்று வலிக்கு 1/2 கரண்டி வெந்தயம் அரைத்து மோரிலோ தண்ணீரிலோ கலந்து கொடுக்க தீரும்.

11. உடம்பு வலி நீங்க வாரம் ஒரு முறை தூதுவளை இலையை நெய்யில் வதக்கி குழம்பு செய்து சாப்பிடவும்.

12. ஒரு பக்கவலி நீங்க பொரித்த பெருங்காயத்தை தூள் செய்து வெற்றிலையுடன் மடித்து மென்று தின்றால் வலியும் வரட்டு இருமலும் நீங்கும்.

## சுனாமி பற்றி தெரிந்து கொள்வோம்

**சுனாமி என்றால் என்ன?**

கடலுக்கு அடியில் இடம் பெறும் பூகம்பம் காரணமாக கடல் நீரில் உருவாகும் மாபெரும் அலைகளையே சுனாமி என்று கூறுகின்றோம் நீர்ப்பரப்பில் பெரிய கல்லைப் போட்டால் அதன் மூலம் ஏற்படும் பரவிச் செல்லும் நீர்க்குமிழி போல் பூகம்பம் இடம் பெற்ற இடத்தில் இருந்து சகல திசைகளுக்கும் நீர் பரவிச் செல்கிறது. கடந்த டிசெம்பர் மாதம் 26ம் திகதி உருவான சுனாமி இந்தோனேசியாவில் அடுத்துள்ள கடல் பிரதேசத்தில் பாரிய பூமி நடுக்கத்தின் காரணமாகவே ஏற்பட்டுள்ளது.



**சுனாமி எவ்வாறு உருவாகிறது?**

கடுமையான கல் தட்டுக்களினாலேயே பூமி உருவாகி இருக்கிறது. அந்த நிலத் தட்டுக்கள் பூமியின் உள்ளே இருக்கும். குழம்புகளில் மிதந்து கொண்டு எப்போதுமே சுற்றிக் கொண்டு இருக்கும் அவ்வாறு சுற்றிக் கொண்டிருக்கும் போது இந்த நிலத்தட்டுக்கள் ஒன்றையொன்று உரசுவதும் அடிக்கடி நடைபெறுகிறது.

இவ்வாறு மிதந்து கொண்டிருக்கும் நிலத்தட்டுக்களின் இடையே இலங்கை அமைந்திருக்கும் இந்து அவுஸ்ரேலியா என்ற நிலத்தட்டும் யுரேசியன் நிலத்தட்டின் ஒரு பகுதியான பர்மா நிலத்தட்டும் ஒன்றை ஒன்று உரசுவதனால் உருவாகும் அசைவிற்கு எதிரான சக்தி மிகவும் பலம் வாய்ந்தது. இதுதான் டிசம்பர் 26ம் திகதி உருவான சுனாமிக்கு காரணமாகும்.

**சுனாமி அலைகள் எவ்வளவு வேகமானவை?**

சுனாமி அலைகள் மணிக்கு 500 மைல்கள் (805 கி.மீ) வேகத்தில் (ஜெட்விமானம் ஒன்றின் வேகத்திற்கு சமமாக) செல்லும் அது ஆழ்ந்த கடலில் இவ்வளவு வேகமாகச் சென்றாலும் அதன் உயரம் ஒரு சில அடிகளையும் விஞ்சி விடாது ஆனாலும் அது கரையோரமாக ஆழம் குறைந்த கடலில் அதன் வேகம் மிகவும் குறைவடைந்து சக்தியும் அலையின் உயரமும் மிகவும் அதிகம் பலம் மிக்கதாக அதிகரிக்கின்றது.

**சுனாமி மீண்டும் எவ்வளவு காலத்திற்கு பின்னர் ஏற்படலாம்?**

உலகில் இதுவரை ஏற்பட்ட சுனாமிகளில் அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட சுனாமியே பயங்கரமானதும் பாரியதும் ஆகும். இந்தோனேசியாவின் கிரகடோவா எரிமலை வெடிப்பின் காரணமாக கடந்த ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் இந்தியக் கடலில் பாரியதொரு சுனாமி நிலமை பதிவாகியுள்ளது. 1883 இல் ஏற்பட்ட இந்த அனர்த்தத்தில் சுமார் 36 000 பேர்

கொல்லப்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளது.

**சுனாமியில் இருந்து எவ்வாறு தப்புவது?**

***சுனாமியின் முன்னறிவுகள் பற்றி தெரிந்திருத்தல்***

சுனாமி ஏற்பட சில வினாடிகளுக்கு முன்னர் உங்களால் பூமி அதிர்ச்சி நிலையை உணரலாம் அத்துடன் கடல் நீர் வற்றி கடலில் தரை தெரியத் தொடங்கும் வற்றிப்போன தரையில் மீன்கள் துடிப்பதையும் கடலில் நிறுத்தப்பட்டுள்ள வள்ளங்கள் போன்றவை தரையில் கிடப்பதையும் காணக் கூடியதாக இருக்கும் சுனாமி பகலில் மட்டுமன்றி இரவிலும் உருவாகலாம்.

***பல அலைகளை எதிர்பாருங்கள்***

சாதரணமாக பத்து நிமிடங்களுக்கும் 45 நிமிடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் அலைகள் மீண்டும் மீண்டும் உருவாகலாம். இந்த நிலமை இரண்டு மணிநேரம் இல்லது அதற்கு கூடிய காலம் தொடரும்.

***உடனடியாக உயரமான இடத்தை நாடுங்கள்***

கடல் ஓரத்தில் இருந்தும் மற்றும் ஆறுகள் நீரோடைகள் கடலுடன் சேரும் இடங்களிற்கு அண்மையில் இருந்து விலகி உடனடியாக உயரமான இடம் தெரியவில்லையாயின் உடனடியாக ஹெட்டேல் ஒன்று அல்லது அது போன்ற கெட்டியான ஒரு கட்டடத்தின் உச்சிக்கு அல்லது உயரமான ஒரு மரம் ஒன்றில் ஏறிக் கொள்க.

***சொத்துக்களைப் பாதுகாக்கச் செல்லாதீர்***

உங்களுடைய உயிரைவிட சொத்துக்கள் மிகப் பெறுமதி வாய்ந்தவை அல்ல.

***பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்***

ஆபத்தின் நிலையை உங்களால் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும் ஆபத்து இல்லை என்பது நிச்சயமாக தெரியும் வரை ஆபத்தான இடங்களை நாடவேண்டாம்.




முதலாவது அலையுடன் அழிவு முடிந்து விடாது அதன் பின் மிகவும் பலமான அலைகள் பின் தொடர்ந்து வரக் கூடும்.

**வள்ளம் ஒன்றில் கடலுக்குச் செல்வீராயின்**


நீங்கள் கரைக்கு வர முயற்சி செய்ய வேண்டாம் கடல் கரையை விட ஆழமான நீரில் அலைகளின் உயரம் குறைவாகும்.

**ஆசிரியர் பெற்றோருடன் சுனாமியின் போது தப்பிக் கொள்வது பற்றி அறியுங்கள்**

இது போன்ற நிலமையின் போது உயிர்தப்புவதற்கு உங்களைச் சுற்றி உங்கள் வீட்டின் அருகில் அல்லது சுற்றியுள்ள உயலமான இடங்கள் பற்றி அறிந்து கொள்ளுங்கள் நீங்கள் சுனாமி பற்றி அறிந்தவற்றை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள் அது எப்போதாவது இன்னொருவரின் உயிரைக் காப்பதற்கு உதவியாகஅமையும்.



## வம்சாவழி


சின்னட்டி – சடைச்சி
மாரிமுத்து (அமரர்)
பொன்னி (அமரர்)
பாறி (அமரர்)
சம்பரம் (அமரர்)
பசுபதி
சின்னத்தம்பி (அமரர்)
இளையகுட்டி
அரியமணி
தம்பு – பூதி
அரியகுட்டி- (அமரர்)
நாகமணி (அமரர்)
ஆச்சிக்குட்டி
கமலாவதி
+
இராசசிங்கம்
ஈஸ்வரன்
ஈஸ்வரி
சதீஸ்வரன்
நஜீரன்
கவீசன்
தவநாயகம்
+
செல்வமணி
சுவர்ணா
சுவர்ணன்
சர்மிலன்
லக்சனா
சந்திரகுமாரன்
+
கற்பனாவதி
சாகித்யா
கல்கிசன்
கஸ்மிரன்
சாதுரியா
மனோகரன்
+
இரத்தினேஸ்வரி
கௌதமி
யஸ்மினி
கௌதறாம்
துளசி
சுஜித்
சுஜீவன்
துஸ்யந்தன்
நிர்மலாவதி
+
முத்துலிங்கம்
சுதர்சனா
நிருஜன்
யர்சனா
கிர்சனா
சுசிலாவதி
+
தர்மலிங்கம்
ஜசிந்தன்
இந்துஜா

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் ஒளிர்ந்து.
எங்கள் வாழ்விற்கு வழி வகுத்துத்
தன்னைத் அர்ப்பணித்த
அன்புத் தெய்வத்தின் மறைவு செய்தி கேட்டு
உடன் வந்து உதவிக்கரம் நீட்டிய
உற்றார் உறவினர் நண்பர்கள் அயலவர்களிற்கும்
துண்டுப் பிரசுரம் மூலம் கண்ணீர் அஞ்சலி
செலுத்திய
இளையகுட்டி குடும்பத்தினர் வளர்பிறை சேமிப்புச்
சங்கத்தினர்
அனைவருக்கும் தொலைபேசி ஊடாக அனுதாபம்
தெரிவித்தவர்களிற்கும் இறுதிக் கிரியைகளிலும்
இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்ட
அனைவருக்கும்
அந்தியோட்டி சபிண்டீகரணக் கரியைகளிலும்
கலந்து
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்தித்ததோடு
மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்ட
அனைவருக்கும்
இன்னும் பற்பல வழிகளில் உதவிகள் புரிந்த
அனைத்து அன்பு நெஞ்சங்களிற்கும்
எமது குடும்பத்தின் சார்பில் நன்றியை
தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

**பிள்ளைகள்**

*" தாயகம்*
*ஊரெழு கிழக்கு,*
*ஊரெழு.*


கீதாசாரம்
எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.
Pillaiyar